# நாளை அதிகாலை 4.30 மணி முதல் மெட்ரோ ரயில் இயக்கம்

சென்னை, டிச. 20: மீனம்பாக்கம் ஏ.எம்.ஜெயின் கல்லூரியில் நடக்கவுள்ள யோகா நிகழ்ச்சிக்கு பொதுமக்கள் சென்று வர வசதியாக, ஞாயிற்றுக்கிழமை (டிசம்பர் 22) மட்டும் அதிகாலை 4.30 மணி முதல் மெட்ரோ ர்யில் இயக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீனம்பாக்கம் ஏ.எம்.ஜெயின் கல்லூரியில் டிசம்பர் 22-ஆம் தேதி யோகா நிகழ்ச்சி நடக்கவுள்ளது. எனவே, பொதுமக்களின் வசதிக்காக மெட்ரோ ரயில்களின் சேவையை அதிகாலை முதல் இயக்க வேண்டும் என்று கோரிக்கை வைக்கப்பட்டது. இதனை ஏற்று, யோகா நிகழ்ச்சிக்கு பொதுமக்கள் சென்று வர வசதியாக டிசம்பர் 22-ஆம் தேதி மட்டும் அதிகாலை 4.30 மணி முதல் மெட்ரோ ரயில்கள் இயக்கப்படும். இந்தத் தகவல் மெட்ரோ ரயில் நிறுவன செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.